**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 16-06-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-06-16 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-06-17 | 2023-06-18 | 2023-06-19 | 2023-06-20 | 2023-06-21 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 8.0 | 10.0 | 4.0 | 12.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 39.0 | 38.0 | 38.0 | 37.0 | 37.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 29.0 | 28.0 | 28.0 | 27.0 | 27.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 70 | 90 | 90 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 50 | 70 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10 | 10 | 10 | 8 | 6 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 180 | 250 | 288 | 250 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 8 | 8 | 8 | 5 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் ( 18 ஜூன் முதல் 21ஆம் தேதிவரை) இலேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37.0°C - 38.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்பநிலை 27.0°C-29.0°C வேறுபாட்டிலும் இருக்கும். பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 06 -10 கிலோமீட்டர் வேகதில் இருக்கும் என எதிர்பார்க்லாம்.

## பொது ஆலோசனை:

பாகற்காய் பயிரில் தத்துப் பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படலாம். இதனை கட்டுப்படுத்த 10 லி தண்ணீருக்கு 40 கிராம் பேசில்லஸ் சப்டிலிஸ், 300மி நன்கு புளித்த தயிர் கலந்து தெளிக்கவும்.

## குறுஞ்செய்தி :

நிகழும் வானிலையினால் தக்காளி பயிரை தாக்கும் இலைக்கருகல் வரவாய்ப்புள்ளதால் நோய் பாதிக்கப்பட்ட பயிர் குப்பைகளை அழித்தல், கட்டுப்படுத்த மேன்கோசெப் லிட்டருக்கு 0.2 கிராம் தெளிக்கவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பருத்தி | நிகழும் வானிலையின் காரணமாக பருத்தி பயிரில் செர்கோஸ்போரா இலைப்புள்ளி வர வாய்ப்புள்ளதால் ஆரம்ப நிலையில், மான்கோசெப் (அ) காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2 கிலோ /எக்டர் தெளிக்கவும். 15 நாட்கள் இடைவெளியில் 2 - 3 முறை தெளிக்கவும். |
| கரும்பு | கரும்பில் வாடல்நோய் தென்படும் விவசாயிகள் கார்பண்டசிம் 2 கிராம்/லிட்டர் என்ற அளவில் வேர் பகுதியில் 15 நாட்கள் இடைவெளியில் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம் (அல்லது) எருவில் டிரைக்கோடெர்மா விரிடி இரண்டு கிலோ/ஏக்கர் என்ற அளவில் கலந்து வேர் பகுதியில் இடலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெங்காயம் | நிகழும் வானிலையின் காரணமாக சின்ன வெங்காய பயிரில் இலைப்பேன் வரவாய்ப்புள்ளது. ஸ்பினோசேட் 0.5 மிலி /லிட்டர் அல்லது பிப்ரோனில் 1.5 மிலி /லிட்டர் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். |
| கொய்யா | கொய்யாவில் மாவுப் பூச்சி, மேலாண்மை தியாமெதாக்சம் 0.5 கிராம்/லிட் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |
| பலா | பலா அறுவடை முடிந்தபிறகு நன்கு வளர்ந்த மரங்களுக்கு , 1650 கிராம் யூரியா , 2220 கிராம் சூப்பர் பாஸ்பேட் 850 கிராம் பொட்டாஷ் உரத்தை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். |